**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**கீழ்பென்னாத்தூர்**
**முன்னிலை : திரு. M.C.அருண், L.L.B.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கீழ்பென்னாத்தூர்**
**2026ம் ஆண்டு ஜீன் மாதம் 17ம் நாள் புதன்கிழமை**
**சுருக்குமுறை வழக்கு எண்.147/2025**
**CNR No. TNTM24-001251-2024**

**அரசுக்காக**
காவல் உதவி ஆய்வாளர்,
கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம்,
திருவண்ணாமலை மாவட்டம்.
**குற்ற எண். 753/2021** ......**குற்றமுறையிடுபவர்**

**//எதிராக//**

எதிரி- முருகன், த/பெ. பாண்டு,
எண்.229, திருவள்ளுவர் சாலை,
கீழ்பென்னாத்தூர் டவுன் (ம) தாலுக்கா,
திருவண்ணாமலை மாவட்டம்.

......**குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள்**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021ம் தேதியிட்ட R.O.C.No. 814/2020/RG/F1ன் படியும், குற்றவியல் நடைமுறை விதிகள், 2019, விதி 106(4)ன் படியும் வழக்கின் சுருக்கம்,

| | |
|---|---|
| குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம். |
| குற்றம் சாட்டப்பட்டவர் | எதிரி- முருகன், த/பெ. பாண்டு,<br>எண்.229, திருவள்ளுவர் சாலை,<br>கீழ்பென்னாத்தூர் டவுன் (ம) தாலுக்கா,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| நிலையக்குற்ற எண் | குற்ற எண். 753/2021 |
| குற்றம் சாட்டப்பட்டது | எதிரியின் மீது 279, 337 IPC –ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | எதிரியின் மீது 279, 338 IPC –ன் கீழ் |

| | |
|---|---|
| குற்றம் நிகழ்ந்த நாள் | 05.12.2021 |
| தெரிவிக்கப்பட்ட நாள் | 07.12.2021 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | எதிரி நிலைய ஜாமின் பெற்று சென்றுள்ளார். |
| எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | எதிரி நிலைய ஜாமின் பெற்று சென்றுள்ளார். |
| குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 22.10.2022 |
| குவிமுச பிரிவு 240 ன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேட்கப்பட்ட நாள் | 06.06.2025 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | 09.01.2026 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | 10.06.2026 |
| குவிமுச பிரிவு 311ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம் | இல்லை |
| குவிமுச பிரிவு 294ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம் | இல்லை |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை | <table><tr><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr><tr><td>அ.சா.1</td><td>09.01.2026</td><td>09.01.2026</td></tr></table> |

| | | | |
|---|---|---|---|
| செய்யப்பட்ட தேதிகள் | அ.சா.2 | 02.02.2026 | 02.02.2026 |
| | அ.சா.3 | 02.02.2026 | 02.02.2026 |
| | அ.சா.4 | 04.02.2026 | 04.02.2026 |
| | அ.சா.5 | 04.02.2026 | 04.02.2026 |
| | அ.சா.6 | 04.02.2026 | 04.02.2026 |
| | அ.சா.7 | 15.05.2026 | 15.05.2026 |
| | அ.சா.8 | 22.05.2026 | 22.05.2026 |
| | அ.சா.9 | 10.06.2026 | 10.06.2026 |
| குவிமுச பிரிவு 313(1)(b)ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 12.06.2026 | | |
| தலைமறைவு எதிரிகள் குறித்த விபரம் | இல்லை | | |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம் | இல்லை | | |
| தண்டிக்கப்பட்டது | இல்லை | | |
| தீர்மானம் | குற்றவாளி அல்ல. | | |
| முடிவு | எதிரியை குற்றவாளி அல்ல என்று குவிமுச பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. | | |

இந்த வழக்கானது கடந்த 02.03.2024–ம் தேதியன்று நீதித்துறை நடுவர் நீதிமன்றம் – II, திருவண்ணாமலையில் சுருக்குமுறை வழக்கு எண்.419/2024 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, பின்னர் திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் விடுவி

எண்.6035/2024, 22.11.2024ம் தேதியிட்ட உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, பின்னர் கடந்த 01.04.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில், ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.147/2025 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, அரசுத் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத் தொடர்வுத் துறை உதவி வழக்கறிஞர் நிலை – 2, கீழ்பென்னாத்தூர் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.பாண்டுரங்கன் அவர்கள் முன்னிலையாகியும், இறுதியாக இவ்வழக்கு கடந்த 15.06.2026–ம் தேதி என் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது கீழ்பென்னாத்தூர் காவல் உதவி ஆய்வாளர் குற்ற எண்.753/2021–ல் மீது இதச பிரிவுகள் 279, 338–ன் கீழ் எதிரியின் மீது தாக்கல் செய்துள்ள குற்ற இறுதியறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**1. அரசு தரப்பு வழக்கு யாதெனில்,** கடந்த 05.12.2021–ம் தேதி 05.00 மணியளவில் கீழ்பென்னாத்தூர் to அவலூர்பேட்டை போகும் மெயின் ரோட்டில் சாட்சி–2 கார்த்திக் என்பவர் TN 25 BL 5128 எண்ணுள்ள Bajaj Pulsar இருசக்கர வாகனத்தை ஓட்ட அவருக்கு பின் சாட்சி–3 வெங்கடகிருஷ்ணன் என்பவரை உட்கார வைத்துக்கொண்டு வீட்டிற்கு போக கீழ் பென்னாத்தூரில் இருந்து எரும்பூண்டி கிராமம் என்று கொண்டிருந்த போது கீழ்பென்னாத்தூர் கோட்டான் எரிக்கரை கன்னிமார் கோயில் அருகே அவர்களுக்கு எதிரே வந்த TN 16 BA 2000

என்ற எண்ணுள்ள Royal Enfiled என்ற இருசக்கர வாகனத்தை எதிரி முருகன் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரண் அடிக்காமலும் ஓட்டி வந்து சாட்சி 2 கார்த்திக் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் சாட்சி–2க்கு வலது கை, வலது கை ஆள்காட்டி விரல், மூக்கு, வலது கால் பாதம் மற்றும் வலது கால் கட்டை விரல் ஆகிய இடங்களில் கொடுங்காயங்களையும் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரிக்கு எதிராக பிரிவு 279, 338 இ.த.ச.வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்று கூறி கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதின் பேரில், ஆவணங்களை பரிசீலனை செய்த இந்நீதிமன்றம், வழக்கினை மேற்படி எண்ணில் கோப்புக்கு எடுத்து, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

**2. எதிரிக்கு வழக்காவணங்கள் வழங்கி, குற்றங்கள் குறித்து வினவிய விவரம்:**

இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பியதன் பேரில், எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும், கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்கு போதிய கால அவகாசம் அளித்து, இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்த வகையில், எதிரி இவ்வழக்கின் படியான குற்றத்தை புரிந்துள்ளார் என்பதை அனுமானிக்க போதிய அடிப்படை ஆதாரங்கள் இருந்ததால், எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338–ன் கீழும், குற்றச்சாட்டு வனைந்து, எதிரியிடம் குற்றம் குறித்து வினவியபோது, தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து,

தான் குற்றமற்றவர் என்று கூறியதால், அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.9** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்கள் தரப்பில் **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.9** வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

3. **அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்**

கடந்த 05.12.2021–ம் தேதி 05.00 மணியளவில் கீழ்பென்னாத்தூர் to அவலூர்பேட்டை போகும் மெயின் ரோட்டில் சாட்சி–2 கார்த்திக் என்பவர் TN 25 BL 5128 எண்ணுள்ள Bajaj Pulsar இருசக்கர வாகனத்தை ஓட்ட அவருக்கு பின் சாட்சி–3 வெங்கடகிருஷ்ணன் என்பவரை உட்கார வைத்துக்கொண்டு வீட்டிற்கு போக கீழ் பென்னாத்தூரில் இருந்து எரும்பூண்டி கிராமம் என்று கொண்டிருந்த போது கீழ்பென்னாத்தூர் கோட்டான் எரிக்கரை கன்னிமார் கோயில் அருகே அவர்களுக்கு எதிரே வந்த TN 16 BA 2000 என்ற எண்ணுள்ள Royal Enfiled என்ற இருசக்கர வாகனத்தை எதிரி முருகன் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரண் அடிக்காமலும் ஓட்டி வந்து சாட்சி 2 கார்த்திக் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் சாட்சி–2க்கு வலது கை, வலது கை ஆள்காட்டி விரல், மூக்கு, வலது கால் பாதம் மற்றும் வலது கால் கட்டை விரல் ஆகிய இடங்களில் கொடுங்காயங்களை ஏற்படுத்தியுள்ளார்.

கடந்த 07.12.2021ம் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலையப்பொறுப்பில் இருந்த போது அன்றைய தினம் பகல் 01.00 மணியளவில் குமரவேல், வயது–63, த/பெ. ஆதிமூலம்,

பிள்ளையார் கோவில் தெரு, எறும்பூண்டி கிராமம், கீழ்பென்னாத்தூர் தாலுக்கா என்பவர் நிலையம் ஆஜராக கொடுத்த **அ.சா.ஆ.1** புகார் மனுவைப் பெற்று நிலையக் குற்ற எண்.753/2021, ச/பி. 279, 337 இ.த.சவின் கீழ் **அ.சா.ஆ.7** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே பகல் 02.00 மணியளவில் சம்பவயிடமான கீழ்பென்னாத்தூர் – அவலூர்பேட்டை மெயின்ரோடு கீழ்பென்னாத்தூர் கோட்டான் ஏரி கன்னிமார் கோவில் அருகே சென்று அங்கிருந்த சாட்சிகள் ரஞ்சித்குமார், வெங்கடேசன் என்பவரிடம் **அ.சா.ஆ.3** பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் பெற்றும் மேற்படி பார்வை மகசர் சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ.2** பார்வை மகசர் மற்றும் **அ.சா.ஆ.8** மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் சம்பவ இட சாட்சிகளான குமரவேல், கார்த்திக், வெங்கடகிருஷ்ணன், முருகன், ரஞ்சித்குமார், வெங்கடேசன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் விபத்துக்குள்ளான TN 25 BL 5128 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தை 11.12.2021ம் தேதி விபத்தின் காரணம் அறியும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் சம்பவயிட சாட்சிகளின் விசாரணை மூலமும், தனது விசாரணை மூலமும் சம்பவம் நடந்து உண்மை என தெரியவரவே இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில், 24.12.2021ம் தேதியன்று 11.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரி முருகன் என்பவரை கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தின் முன்பு ஆஜரானவரை குற்றக் காரணம் கூறி கைது செய்து நிலையம்

அழைத்துவந்து தக்க இருநபர் பிணையம் பெற்று நிலையப்பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் அன்றைய தினமே விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 25 BA 2000 என்ற பதிவெண் கொண்ட ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை விபத்தின் காரணம் அறியும்பொருட்டு மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தி விபத்தில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. விஜயகுமார் என்பவரை 22.10.2022–ம் தேதியன்று விசாரித்து **அ.சா.ஆ.4** மற்றும் **அ.சா.ஆ.5** மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் இவ்விபத்தில் காயம்பட்ட அ.சா.2 கார்த்திக் என்பவரை திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரியில் மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. கிருஷ்டி ஜெயமுருகன் என்பவரை விசாரணை செய்து **அ.சா.ஆ.6** விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். விபத்தில் காயம்பட்ட அ.சா.2 கார்த்திக் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வழங்கிய காயச்சான்றில் அவருக்கு ஏற்பட்ட 1, 2, 4 மற்றும் 7வது காயங்கள் கொடுங்கயம் என கருத்துரை வழங்கியுள்ளதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.சவில் இருந்து 279, 338 இ.த.சவாக சட்டப்பிரிவு மாற்றம் செய்து **அ.சா.ஆ.9** சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் தனது புலன்விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக 22.10.2022ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**4. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விபரம்**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் தெரிய வருவது யாதெனில்,

**4.1)அ.சா. 1 –** குமரவேல், தனது சாட்சியத்தில், தான் தற்போது எரும்பூண்டி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன் என்றும், 05.12.2021ம் தேதி எனது மகன் மாலை 05.00 மணிக்கு மிலிட்டரியில் இருந்து தங்கள் ஊரான எரும்பூண்டிக்கு வருவதற்காக கீழ்பென்னாத்தூருக்கு வந்தார் என்றும், தங்களுக்கு போன் செய்து வந்துவிட்டதாக சொன்னதால் கீழ்பென்னாத்தூருக்கு பல்சர் வண்டியை தனது பேரன் ஜெய்சிம்மன் பல்சர் வாகனத்தை கீழ்பென்னாத்தூருக்கு கொண்டு வந்து அந்த பல்சர் வாகனத்தை கார்த்தி ஓட்டவும் ஜெய்சிம்மன் பின்னால் அமர்ந்துக்கொண்டு வீட்டிற்கு வரும் வருதற்காக பென்னாத்தூருக்கு அருகே உள்ள கன்னமார் கோவில் அருகே வரும்போது தனது மகனுக்கு எதிரே வந்த புல்லட் வாகனத்தில் வந்த முருகன் என்பவர் தனது மகன் ஓட்டிவந்த வாகனத்தின் மீது இடித்துவிட்டார் என்றும், அதில் தனது மகன் கார்த்திக்கு தலை, கை, நெற்றி, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், மேற்படி முருகன் ஓட்டிவந்த வாகனத்தின் எண். TN B 2000 ராயல் என்பீல்டு என்றும், அதன் பின்னர் ஆம்புலென்ஸ் மூலமாக தனது மகன் கார்த்திக் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைப் பார்த்து பின்பு அங்கிருந்து பெங்களூருவில் இருந்த மிலிட்டரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றுவிட்டார் என்றும்,

மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபர் முருகன் அவருடைய ஊர் பென்னாத்தூர் என்றும், பின்னர் தான் 7ம் தேதி கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் அதில் உள்ள சங்கதிகள், தான் சொன்னதுதான் என்றும், மேற்படி புகார் **அ.சா.ஆ.1** என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(4.2) அ.சா.2 –** கார்த்திக் தனது சாட்சியத்தில், தான் தற்போது சண்டிகரில் ராணுவத்தில் பணிபுரிகிறேன் என்றும், அ.சா.1 குமரவேல் தனது தந்தை என்றும், பட்டியல் சாட்சி–3 வெங்கட கிருஷ்ணன் தனது அண்ணன் மகன் என்றும், 2021ம் ஆண்டு, டிசம்பர் மாதம், 4ம் தேதி ஜம்முவில் இருந்து விமானத்தின் மூலமாக 5ம் தேதி காலை சென்னைக்கு வந்து பின்னர் அங்கிருந்து பஸ்பிடித்து மாலை சுமார் 05.00 மணியளவில் கீழ்பென்னாத்தூர் டவுனுக்கு வந்துவிட்டதாகவும், பின்னர் தான் தனது அப்பாவிற்கு போன் செய்து தனது அண்ணன் மகனை இருசக்கரத்தை கொண்டு வரசொன்னதாகவும், பின்னர் தனது அண்ணன் மகன் வெங்கட கிருஷ்ணன் கொண்டுவந்த பஜாஜ் பல்சர் TN 25 BL 5128 என்ற வாகனத்தில் தான் வாகனத்தை ஓட்ட பின்புறம் வெங்கட கிருஷ்ணன் உட்கார்ந்து வர கன்னிமார் கோவிலுக்கு முன்பு தாங்கள் சென்றுக்கொண்டிருந்த போது ராயல் என்பீல்டில் இருசக்கர வாகனத்தின் எண்.TN 25 BA 2000 என்ற வண்டியை ஓட்டிவந்த முருகன் வேகமாக வந்து தனது இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார் என்றும், அந்த விபத்தில் தனக்கு வலது பக்க கை

எலும்புகள் உடைந்துவிட்டது என்றும், வலது காலில் உள்ள கட்டைவிரல் மேல் உள்ள சதைகள் கட்டாகி தொங்கிவிட்டது என்றும், முட்டிக்கு மேலும், கண்புருவத்தின் மேலும், இடது மற்றும் வலது கண்ணின் கீழ்புறத்திலும் காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் தனக்கு விபத்து ஏற்பட்டுவிட்டது என்று தனது அப்பாவிற்கும் தனது மனைவிக்கும் தகவல் சொன்னேன் என்றும், பின்னர் ஆம்புலென்ஸ் வந்தது அதில் ஏறி திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் முதல் உதவி செய்தார்கள் என்றும், பின்னர் தான் ராணுவ மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(4.3) அ.சா.3– வெங்கட கிருஷ்ணன் தனது சாட்சியத்தில், தான் தற்போது சென்னை போத்தீஸ் துணிக்கடையில் மேற்பார்வையாளராக பணிசெய்து வருகிறேன் என்றும், அ.சா.2ன் தகப்பனாரைத் தெரியுமா என்றால் தெரியும் அவரது பெயர் தெரியாது என்றும், கடந்த 05.12.2021ம் தேதி சுமார் 04.40 மணியளவில் எங்கள் வீட்டில் இருந்து கிளம்பி பென்னாத்தூர் வந்தேன் என்றும், பென்னாத்தூர் வரும்போது மணி 05.00 இருக்கும் என்றும், தனது சித்தப்பா வந்தபோது அவரது பேகை நான் வாங்கிக்கொண்டு மேற்படி இருசக்கர வாகனமான TN 25 BL 5128 வண்டியில் தனது சித்தப்பா கார்த்தி வண்டியை ஓட்ட நான் பின்புறம் உட்கார்ந்து வந்தேன் என்றும், கீழ்பென்னாத்தூரில் இருந்து அவலூர் பேட்டை வழியாக கோட்டான் ஏரியருகே செல்லும்போது கன்னியம்மன் கோவிலின் அருகே 20 மீட்டடர் அருகே நாங்கள் 20ல்

இருந்த 25 கிலோமீட்டர் வேகத்தில் சென்றபோது வளைவுக்கு முன் ராயல் என்பீட்டு வாகனத்தின் எண். TN 25 BL 2000 என்ற வண்டியை ஓட்டி வந்து தங்கள் வாகனத்தின் மீது மோதிவிட்டார் என்றும், அப்போது ராயல்என்பீட்டில் இருந்த கம்பிகள் எனது சித்தப்பாவின் தொடை, கட்டைவிரல், கை முட்டி, கண்ணருகே காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், தனக்கு பெரிதளவில் காயம் ஏதும் இல்லை என்றும், பின்னர் தனது சித்தப்பா வீட்டிற்கு தகவல் கொடுத்தார் என்றும், பின்னர் தனது பாட்டி, சித்தி ஆகியோர் வந்து ஆம்புலென்ஸ்க்கு தகவல் கொடுத்து மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர் என்றும், தான் பயந்துவிட்டதால் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(4.4)** அ.சா.4– முருகன், தன்னுடைய சாட்சியத்தில், தான் திருவண்ணாமலை ரோடு மசூதி காம்பளக்ஸில் அரிவிஷ்ணு போட்டோ ஸ்டுடியோ நடத்தி வருகிறேன் என்றும், எதிரியை தனக்கு தெரியும் என்றும் அவர் கவுன்சிலர் ஆவார் என்றும், அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோரை தனக்கு தெரியாது என்றும், சம்பவத்தைப் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

**(4.5)** அ.சா.5– ரஞ்ஜித் குமார் தனது சாட்சியத்தில், தான் தற்போது கீழ்பென்னாத்தூரில் ஆட்டோ ஓட்டிவருகிறேன் என்றும், பட்டியல் சாட்சி6வெங்கடேசனை தெரியும் என்றும், தற்போது தன்னிடம்

காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து தன்னுடையது என்றும், 2 வது கையொப்பம் பட்டியல் சாட்சி 6 வெங்கடேசன் உடையது என்றும், சுமார் 1 வருடத்திற்கு முன்பு கீழ்பென்னாத்தூரில் உள்ள கன்னிமார் கோவில் அருகே அவலூர்பேட்டை செல்வதற்காக நானும் பட்டியல் சாட்சி 6 வெங்கடேசனும் மதிய வேலையில் சென்று கொண்டு இருந்தோம் என்றும், அங்கு கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய போலிசார் அந்த இடத்தை பார்வயிைட்டு விபத்து குறித்து படம் வரைந்து அது குறித்து எழுதிய தாளில் நானும் வெங்கடேசனும் கையொப்பம் செய்தோம் என்றும், மேற்படிபார்வை மகசர் **அ.சா.ஆ.2** ஆக குறயீடு செய்யப்படுகிறது என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(4.6)** அ.சா.6– வெங்கடேசன், தன்னுடைய சாட்சியத்தில், தான் கீழ்பென்னாத்தூரில் வசித்து ஆட்டோ ஓட்டி வருகிறேன் என்றும், அ.சா.5 ரஞ்சித் என்பவரை தெரியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள2வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும்,மேற்படி கையெழுத்தை தான் சுமார் வருடத்தற்கு முன்பு கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்திற்கு வெளியேதான் இருந்த போது போலிசார் காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொழுத்து செய்தேன் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என தனக்கு தெரியாது என்றும், பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகும் என்றும்,

போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

(4.7) அ.சா.7– விஜயகுமார், தனது சாட்சியத்தில் தான் தற்போது ஸ்ரீபெரும்புதூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அவலுவலராக பணியாற்றிவருகிறேன் என்றும், கடந்த 13.12.2021ம் தேதியன்று மாலை 03.35 மணியளவில் திருவண்ணாமலை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1 ஆக பணியில் இருந்த போது கீழ்பென்னாத்தூர் உதவி ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின்படி TN 25 BL 5128 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் இருசக்கர வாகனத்தை தனது அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்த போது இருசக்கர வாகனத்தில் கீழ்க்கண்ட சேதாரங்கள் காணப்பட்டது என்றும், ே◌ஹண்டல் பார் வளைந்திருந்தது என்றும், முன்புற வலதுபக்க Fork, முன்புற மட்கார்டு, வலதுபுற இன்டிகேட்டார் உடைந்திருந்தது என்றும், வலதுபுற cross bar வளைந்திருந்தது என்றும், பின்புற பிரேக் பெடல் வளைந்திருந்து என்றும், முன்புற பிரேக் கேலிபார் மவுண்டிங் உடைந்திருந்தது என்றும், வலது பக்க கியர் கேசிங் உடைந்திருந்தது என்றும், இருசக்கர வாகனம் ஓட்டிபார்க்கும் நிலையில் இல்லை என்றும், ஆனால் கால்தடை மற்றும் கைத்தடை திறனைப் பற்றி கூற இயலாது என்றும், இந்த விபத்தானது எந்தவித இயந்திர கோளாரினாலும் ஏற்படவில்லை என்று கருத்துரை வழங்கி மோட்டர் வாகன ஆய்வுச்சான்று வழங்கினேன் என்றும், நான் வழங்கிய

மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை **அ.சா.ஆ.4** என்றும், இதே வழக்கில் சம்மந்தப்பட்ட TN 25 BA 2000 என்ற பதிவெண் கொண்ட ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை 24.12.2021ம் தேதியன்று 03.35 மணியளவில் தனது அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்த போது கீழ்க்கண்ட சேதாரங்கள் காணப்பட்டது என்றும், ே ஹண்டல் பார் Fork வளைந்திருந்தது என்றும், முகப்பு விளக்கு, வலது பக்க திசைகாட்டும் விளக்கு உடைந்திருந்தது என்றும், முன்புற மட்கார்டு சேதமடைந்திருந்தது என்றும், cross bar வளைந்திருந்தது என்றும், முன்புற நம்பர் பிளேட் உடைந்திருந்தது என்றும், பின்புற பிரேக் பெடல் சேதமடைந்திருந்தது என்றும், முன்புற வலது பக்க புட் rest வளைந்திருந்தது என்றும், வலது பக்க fuel tank ஒடுங்கியிருந்தது என்றும், சைலன்சர் பைப் சேதமடைந்திருந்தது என்றும், இந்த வாகனமானது ஓட்டிப்பார்க்கும் நிலையில் இல்லை என்றும், கால் தடை மற்றும் கைத்தடை திறன் பற்றி கூற இயலவில்லை என்றும், இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்து இந்த விபத்தானது எந்தவித இயந்திர கோளாரினாலும் ஏற்படவில்லை என்றும், கருத்துரை வழங்கி மோட்டர் வாகன ஆய்வுச்சான்று வழங்கினேன் என்றும், தான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை **அ.சா.ஆ.5** என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(4.8.)** அ.சா.8– மருத்துவர்.கிருஸ்டி, தன்னுடைய சாட்சியத்தில், தான் தற்போது சோழிங்க நல்லூர் அரசு புறநகர் மருத்துவமனையில் உதவி கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், தான்

கடந்த 05.12.2021ம் தேதியன்று திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர பிரிவு மருத்துவராக மாலை 06.40 மணியளவில் பணியில் இருந்த போது கார்த்திக், வயது – 32, த/பெ.குமரவேல் என்பவர் இருசக்கர வாகனத்தில் சென்ற போது எதிரில் வந்த இருசக்கர வாகனத்தில் விபத்து ஏற்பட்டு காயமடைந்ததாக அதே நாள் 05.12.2021 மாலை 06.00 மணியளவில் கீழ்பென்னாத்தூர் ஏரிக்கரை அருகில் காயமடைந்ததாக தன்னிடம் சிகிச்சைக்கு அவரது மனைவி அழைத்து வந்தார் என்றும், தான் அவரை பரிசோதித்த போது சுயநினைவில் இருந்தார் என்றும், அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1) வலது கையில் 3 x 2x 1 செ.மீ. அளவுள்ள கிழிந்த காயமும், 2) வலது ஆள்காட்டி விரலில் 3 x 2x 1 செ.மீ. அளவில் கிழிந்த காயமும், 3) வலது காலில் சிராய்ப்பு காயம் 2x 2 செ.மீ அளவு, 4) மூக்கில் ரத்தம் வழிந்திருந்தது, 5) இடது கண் புருவத்தில் 3 x 2x 1 செ.மீ. அளவு கிழிந்த காயம், 6) வலது தொடையில் 4x 3x 2 செ.மீ. அளவுள்ள கிழிந்த காயம், 7) வலது கால் பாதத்தில் பெருவிரல் கிழிந்து தொங்கிய நிலையிலும், பாதத்தின் தோல் 8 x 4x 5 செ.மீ அளவில் கிழிந்து தொங்கிய நிலையில் காணப்பட்டது என்றும், அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்திருந்தேன் என்றும், ஆனால், அவர் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற விருப்பம் இல்லாமல் வெளியில் சிகிச்சை பெறுவதற்காக சென்றுவிட்டார் என்றும், மேலும், அவர் Com–mand Hospital air force, பெங்களூரு என்ற இடத்தில் சிகிச்சைப் பெற்றதற்கான மருத்துவ சிகிச்சை முடிவு அறிக்கை (Discharge summary) சமர்ப்பித்தார். அதில் அவரது அனைத்து கை எலும்பு மூட்டுகள் (Car–

pometacarpal) விலகியதாகவும் வலது காலில் பெருவிரல் பாதி துண்டிக்கப்பட்டதாகவும், தலையின் மண்டை ஒட்டின் முன்பகுதி எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும், கொடுக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1, 2, 4 மற்றும் 7 ஆகியவை கொடுங்காயம் என்றும், 3, 5 மற்றும் 6 சொற்பகாயங்கள் என்றும் சான்று வழங்கியுள்ளேன் என்றும், தான் வழங்கிய விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.6** ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(4.9) அ.சா.9– முனீஸ்வரன் உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், தான் தற்போது ராணிபேட்டை மாவட்டம் கொண்டம்பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளரா பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 07.12.2021ம் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலையப்பொறுப்பில் இருந்த போது அன்றைய தினம் பகல் 01.00 மணியளவில் குமரவேல், வயது–63, த/பெ. ஆதிமூலம், பிள்ளையார் கோவில் தெரு, எறும்பூண்டி கிராமம், கீழ்பென்னாத்தூர் தாலுக்கா என்பவர் நிலையம் ஆஜராக கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலையக் குற்ற எண்.753/2021, ச/பி. 279, 337 இ.த.சவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7** என்றும், அன்றைய தினமே பகல் 02.00 மணியளவில் சம்பவயிடமான கீழ்பென்னாத்தூர் – அவலூர்பேட்டை மெயின்ரோடு கீழ்பென்னாத்தூர் கோட்டான் ஏரி கன்னிமார் கோவில் அருகே சென்று அங்கிருந்த சாட்சிகள்

ரஞ்சித்குமார், வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும், அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.8** என்றும், பின்னர் சம்பவ இட சாட்சிகளான குமரவேல், கார்த்திக், வெங்கடகிருஷ்ணன், முருகன், ரஞ்சித்குமார், வெங்கடேசன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இவ்வழக்கில் விபத்துக்குள்ளான TN 25 BL 5128 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தை 11.12.2021ம் தேதி விபத்தின் காரணம் அறியும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தினேன் என்றும், சம்பவயிட சாட்சிகளின் விசாரணை மூலமும், எனது விசாரணை மூலமும் சம்பவம் நடந்து உண்மை என தெரியவரவே இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில், 24.12.2021ம் தேதியன்று 11.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரி முருகன் என்பவரை கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தின் முன்பு ஆஜரானவரை குற்றக் காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்துவந்து தக்க இருநபர் பிணையம் பெற்று நிலையப்பிணையில் விடுவித்தேன் என்றும், அன்றைய தினமே விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 25 BA 2000 என்ற பதிவெண் கொண்ட ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை விபத்தின் காரணம் அறியும்பொருட்டு மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினேன் என்றும், பின்னர், விபத்தில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. விஜயகுமார் என்பவரை 22.10.2022-ம் தேதியன்று விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று

வாக்குமூலம் பதிவுசெய்தேன் என்றும், பின்னர் இவ்விபத்தில் காயம்பட்ட அ.சா.2 கார்த்திக் என்பவரை திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரியில் மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. கிருஷ்டி ஜெயமுருகன் என்பவரை விசாரணை செய்து விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன் என்றும், விபத்தில் காயம்பட்ட அ.சா.2 கார்த்திக் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வழங்கிய காயச்சான்றில் அவருக்கு ஏற்பட்ட 1, 2, 4 மற்றும் 7வது காயங்கள் கொடுங்கயம் என கருத்துரை வழங்கியுள்ளதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.சவில் இருந்து 279, 338 இ.த.சவாக சட்டப்பிரிவு மாற்றம் செய்தேன் என்றும், அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ.9** என்றும், இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக 22.10.2022ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5. **எதிரியிடம் குற்றம் குறித்து வினவுதல்,**

அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.9 உடன் முடித்துக்கொள்ளப்பட்டு அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான பகுதிகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் வழக்கு, பொய் சாட்சியம் என மறுத்து தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென கூறி எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, இரு தரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது.

**6. அரசுத் தரப்பு வாதம் என்னவென்றால்,**

அரசுத்தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையின் போது இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு அரசுத்தரப்பால் **அ.சா.1** முதல் **அ.சா.9** வரையான சாட்சிகள் மற்றும் **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.9** வரையான சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.1ன் சாட்சியத்தை மற்ற சாட்சிகள் ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளதாகவும், அரசு தரப்பில் தடய பொருளை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்காது என்றும், அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றசாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரிக்கு தக்க தண்டனை வழங்கவேண்டுமென்று அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

**7. எதிரிகள் தரப்பு எதிர்வாதம் என்னவென்றால்,**

எதிரியின் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில், சம்பவத்தை நேரடியாக தெரியாதென்றும், அ.சா.1 கொடுத்த உண்மைக்கு மாறான புகாரை பெற்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரியை விடுதலை செய்யும்படி கோரப்பட்டுள்ளது.

8. அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் இதச பிரிவுகள் 279, 338 ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா? ஆம் எனில் எதிரிக்கு வழங்கப்பட இருக்கும் தண்டனை எவ்வளவு என்பதேயாகும்.

9. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**10. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி யாதெனில் கேள்வி: அரசு தரப்பு சொல்வதுபோல் எதிரி இதச பிரிவுகள் 279, 338–ன் கீழான குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளியா? ஆம் எனில் எதிரிக்கு வழங்கப்பட இருக்கும் தண்டனை என்ன எவ்வளவு என்பதேயாகும்.**

**(10.1)** மேற்படி சாட்சிகள் மற்றும் சாண்றாவணங்கள் அனைத்தையும் நீதிமன்றம் பரிசீலனை செய்த செய்ததில் அரசுத்தரப்பு வழக்கானது கடந்த 05.12.2021ம் தேதி கீழ்பென்னாத்தூர் – அவலூர் பேட்டை போகும் மெயின் ரோட்டில் அ.சா.2 கார்த்திக் என்பவர் அவருடைய பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனமான TN 25 BL 5218 வாகனத்தை ஓட்ட அவருக்கு பின்புறம் அ.சா.3 வெங்கட கிருஷ்ணன் எனபவரை உட்கார வைத்துக்கொண்டு கீழ்பென்னாத்தூரில் இருந்து எறும்பூண்டி கிராமம் சென்றுக்கொண்டிருந்த போது கீழ்பென்னா்துர் கோட்டான் எரிக்கரை கன்னிமார் கோவில் அருகே அவருக்கு எதிரே வந்த TN 16 BA 2000 எண்ணுள்ள ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை எதிரி முருகன் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து அ.சா.2 கார்த்திக் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் அ.சா.2க்கு வலது கை, வலது கை ஆள்காட்டி விரல், மூக்கு, வலது கால் பாதம் மற்றும் வலது கால் கட்டை விரல் ஆகிய இடங்களில் கொடுங்காயங்களையும் வலது கணுக்கால் இடது கண்புருவம் வலது தொடை ஆகிய இடங்களில் சொற்பகாயங்களையும் ஏற்படுத்தி பிரிவு 279, 338 இ.த.ச.வின் கீழ் குற்றம் புரிந்ததாக மேற்படி அரசுத்தரப்பு வழக்கு குற்றச்சாட்டாகும்.

(10.2) மேற்படி குற்றச்சாட்டினை அரசுத்தரப்பானது நிரூபணம் செய்துள்ளதா என்று இந்நீதிமன்றம் பார்வையிடுகையில், அ.சா.1 குமரவேல் அவரது புகாரிலும் மற்றும் அ.சா.2 மற்றும் அ.சா.3 அவருடைய வாக்குமூலத்திலும் மேற்படி எதிரி முருகன் மகன் பாண்டு தான் மேற்படி வாகனத்தை ஓட்டி மேற்சொன்ன காயங்களை அ.சா.2க்கு ஏற்படுத்தினார் என்று அ.சா.1 புகார்தாரருக்கு யார் சொன்னார்கள் என்றும், மேலும் அ.சா.2 மற்றும் அ.சா3க்கும் மேற்படி எதிரி முருகன் மகன் பாண்டு தான் வாகனத்தை ஓட்டினார் என்று அவர்களது வாக்குமூலத்தில் விசாரித்து தெரிந்துகொண்டதாக சொல்லியுள்ளார்கள். ஆனால் மேற்படி அ.சா.1 முதல் அசா.3 வரையாகியோர்கள் யாரை விசாரித்து விபத்தை ஏற்படுத்திய நபர் மேற்படி எதிரி முருகன் மகன் பாண்டுதான் என்றும் விபத்தில் மோதியது எதிரியின் வாகனமான ராயல் என்பீல்டு TN 16 BA 2000 தான் என்றும் தெரிந்து கொண்டார்கள் என்று அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்களின் வாக்குமூலத்தில் ஏதும் இல்லை. மேலும், மேற்படி அ.சா.2 மற்றும் அ.சா.3 அவர்களுடைய முதல் விசாரணையிலும், முருகன் வேகமாக வந்து மோதிவிட்டர் என்று சொல்லியுள்ளார்கள் ஆனால் மேற்படி முருகன் மகன் பாண்டு என்பவர் கீழ்பென்னாத்துரைச் சேர்ந்தவர் ஆனால் எதிரிகள் எறும்பூண்டியை சேர்ந்தவர்கள் அவ்வாறு இருக்க மேற்படி எதிரியை வைத்து அ.சா.2 மற்றும் அ.சா.1னின் மூலம் அடையாள அணிவகுப்பு ஏதும் நடத்தாத நிலையில் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி எதிரிதான் மேற்படி சம்பவத்தில் ஈடுபட்டார் என்று தெள்ளத்தெளிவாக நிரூபணம் செய்யவில்லை. மேலும், அ.சா.2க்கு கொடுங்காயம் மற்றும் சாதாரண

காயங்கள் ஆகியவை சம்பவத்தில் ஏற்பட்டுள்ள நிலையில் அவருடன் பயணித்த அ.சா.3 வெங்கட கிருஷ்ணனுக்கு எந்தவொரு காயமும் ஏற்படவில்லை. அவர் எந்தவொரு மருத்துவமனைக்கும் சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை. மேலும், சம்பவத்தில் எதிரிக்கு காயம் ஏற்பட்டதாக எந்தவொரு மருத்துவ சான்றுகளும் விசாரணை அதிகாரியால் சமர்ப்பிக்கப்படவில்லை. மேற்படி எதிரி மற்றும் அ.சா.3க்கு எந்தவொரு காயமும் சம்பவத்தில் ஏற்படாததும் இந்த வழக்கு சம்பவத்தைப் பொறுத்து சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும், இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 முருகன் சம்பவத்தைப் பற்றி அவருக்கு தெரியாது என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் புகாரில் விபத்து எப்போது நடந்தது என்று ஏதும் சொல்லப்படவில்லை. அதேபோன்று அ.சா.1 05.12.2021–ம் தேதியன்று திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் 2 முதல் 3 மணி நேரம் மட்டுமே இருந்ததாகவும் பின்னர் அங்கிருந்து பெங்களூரு மிலிட்டரி மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாக சொல்லியுள்ளார். ஆனால் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி அ.சா.2ன் வாக்குமூலத்தை 17.12.2021ம் தேதி பதிவுசெய்ததாக பிரிண்ட் செய்யப்பட்டும் மற்றும் 07.12.2021 என்று 1 யை 0 வாக திருத்தியாகவும் வாக்குமூலுத்தில் காணப்படுகறது. எனவே மேற்படி விசாரணை அதிகாரி 07.12.2021 அல்லது 17.12.2021 ஆகிய இரண்டு தேதிகளில் எந்த தேதியில் எந்த மருத்துவமனையில் வைத்து விசாரித்தார் என்பதே அரசுத்தரப்பால் தெளிவாக சொல்லப்படவில்லை. மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட இரண்டு வாகனத்தையும் 05.12.2021ம் தேதியன்று காவல் நிலையத்தில்

எடுத்துச்சென்றதாக விசாரணை அதிகாரி குறுக்குவிசாரணையில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யாமல் 2 நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்ததும் இவ்வழக்கில் சந்தேகத்தை மேலும், வலுவூட்டுகிறது. மேலும், அ.சா.2க்கு பிரதான சிகிச்சையை பெங்களூரு மருத்துவமனையில் தான் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் பெங்களூரு மருத்துவமனையில் மேற்படி அ.சா.2க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம் ஏதும் பதிவுசெய்து அவர்களிடம் காயச்சான்றினை பெறாதது மேற்படி அ.சா.2க்கு ஏற்பட்ட காயம் என்பது கொடுங்காயமா அல்லது சாதாரண காயமா என்பதும் தெள்ளத்தெளிவான நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

(10.3) மேலும் அ.சா.7– மோட்டார் வாகன ஆய்வாளர் இரண்டு வாகனங்களையும் சுமார் 8 நாட்கள் மற்றும் 19 நாட்கள் காலதாமதாமகத்தான் ஆய்வு செய்துள்ளார். மேற்படி 2 வாகனங்களையும் சம்பவயிடத்தில் வைத்து ஆய்வு செய்யவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளார். அதேபோன்று மேற்படி சம்பவயிடத்தை பார்வையிட்டு அந்த சம்பவயிடத்தின் தன்மையைக் குறித்து எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளார். அதேபோன்று மேற்படி எதிரியின் வாகனம் அ.சா.2ன் வாகனத்தின் மீது மோதியதாக சொல்லப்படும் நிலையில் மேற்படி எதிரி இருசக்கர வாகனத்தின் பெயிண்ட் ஏதும் அ.சா.2ன் வாகனத்தின் மீது ஒட்டிக்கொண்டதாக மோட்டார் வாகன ஆய்வாளர் ஏதும் சாட்சியம்

அளிக்கவில்லை. மேலும், இவ்வழக்கில் அ.சா.4–கண்ணுற்ற சாட்சி மற்றும் அ.சா.6 பார்வை மகசர் சாட்சி ஆகியோர் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். இந்நிலையில் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோரும் அவர்களது முதல் விசாரணையில் ஆஜர் எதிரியை ஏற்கனவே தெரியும் என்று எந்தவொரு சாட்சியமும் அளிக்காத நிலையிலும், அடையாள அணிவகுப்பு அ.சா.2 மற்றும் அ.சா.3யை வைத்து விசாரணை அதிகாரி நடத்தாத நிலையிலும் மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வறிக்கை மற்றும் காயச்சான்று ஆகியவற்றை வைத்துக்கொண்டு அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சியத்தை மட்டுமே வைத்துக்கொண்டும் அவர்களுடைய சாட்சியத்தை உறுதிப்படுத்தும் வகையில் வேறு சாட்சியம் இல்லாத நிலையிலும், அ.சா.2 மேற்படி வாகனத்தை கவனமாகவும், மெதுவாகவும் ஓட்டினார் என்றும் அரசுத்தரப்பில் எந்தவொரு சாட்சியத்தையும் முன்வைக்காத நிலையில், எதிரிதான் அன்றைய தினத்தில் மேற்படி அ.சா.2ன் வாகனத்தின் மீது அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும், வாகனத்தை ஓட்டினார் என்றும் அதன் மூலம் தான் அ.சா.2க்க மேற்படி காயங்கள் ஏற்பட்டது என்று அரசுத்தரப்பால் தெள்ளத்தெளிவாக நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11. முடிவில்,**

அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிய சான்றாவணங்களை கவனமுடன் பரிசீலனை செய்ததில், எதிரி மீது இசத பிரிவுகள் 279, 338–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தகுந்த

சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டபடியால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிக்கு ஆதரவாக எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள பிணை ஆவணங்கள் மேல் முறையீட்டு காலத்திற்குப் பிறகு ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்து, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 17.06.2026 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ARUN M C Digitally signed by ARUN M C Date: 2026.06.17 13:41:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்:**

அ.சா.1 – குமரேசன்
அ.சா.2 – கார்த்திக்
அ.சா.3 – வெங்கடகிருஷ்ணன்
அ.சா.4 – முருகன்
அ.சா.5 – ரஞ்சித்குமார்
அ.சா.6 – வெங்கடேசன்
அ.சா.7 – விஜயகுமார் (வட்டார போக்குவரத்து அலுவலர்)
அ.சா.8 – கிருஸ்டி (மருத்துவர்)
அ.சா.9 – முனீஸ்வரன் (காவல் உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | – | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | – | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3 | – | பார்வை மகசரில் உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | – | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.5 | – | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.6 | – | விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.7 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | – | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.9 | – | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை |

| | | |
|---|---|---|
| **அரசு தரப்பு சான்று பொருட்கள்** | : | இல்லை |
| **எதிரிகள் தரப்பு சாட்சிகள்** | : | இல்லை |
| **எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்** | : | இல்லை |
| **எதிரிகள் தரப்பு சான்றுபொருட்கள்** | : | இல்லை |

ARUN M C
Digitally signed by ARUN M C
Date: 2026.06.17 13:41:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்.

<u>பின் குறிப்பு:</u>

1. வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் மூன்று நாட்களுக்கு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

//உண்மை நகல்//

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்.